செய்தி வெளியீடு எண்: 204 நாள்: 01.03.2011.

**<u>சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத பள்ளிகளுக்கு 11,307 ஆசிரியர் பணியிடங்களையும், 648 ஆசிரியர் அல்லாத பணியிடங்களையும் அனுமதித்தமைக்காக சிறுபான்மை மற்றும் சிறுபான்மையரல்லாத சமுதாயங்களின் பிரதிநிதிகள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி !</u>**

1991 ஜூன் மாதத்திற்குப் பிறகு – 1999 ஆம் ஆண்டு மே மாதம் வரை அரசு அங்கீகாரம் பெற்றுச் செயல்படும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத பள்ளிகளுக்கு ஆண்டுக்கு 331 கோடி ரூபாய்ச் செலவில் 11,307 ஆசிரியர் பணியிடங்களையும், 648 ஆசிரியர் அல்லாத பணியிடங்களையும் அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அண்மையில் ஆணை பிறப்பித்திருந்தார்.

இந்த ஆணையை வரவேற்று – மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலகத்தில் – தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் மற்றும் திரு. மு. அப்பாவு ஆகியோரும், தமிழ்நாடு கிறித்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் திரு. இனிகோ இருதயராஜ், இ.சி.ஐ. பேராயர் எஸ்றா சற்குணம், சென்னை–மயிலை உயர்மன்ற மாவட்ட பேராயர் திரு. ஏ.எம். சின்னப்பா, தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் திரு. வின்செண்ட் சின்னதுரை, தமிழ்நாடு சிறுபான்மை மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு. சேவியர் அருள்ராஜ் உள்ளிட்ட கிறித்துவ சமுதாய பிரதிநிதிகளும், முஸ்லீம் லீக் மாநில அமைப்பாளர் திரு. எம்.கே.எம். முகமது ஷபி, தென்மாவட்ட இஸ்லாமிய பேரவைச் செயலாளர் திரு. மெகபூப் அலி, விருதுநகர் மாவட்ட இஸ்லாமிய பேரவை அமைப்புச் செயலாளர் திரு. கே.எஸ். மொகைதீன் உள்ளிட்ட சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத சமுதாயத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் – இன்று (1–3–2011) சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

மேலும், வன்னியர் சமூக கிறித்துவ மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதற்காகவும்; சென்னை வாழ் கிறித்துவ மக்களுக்காக, பழைய மாமல்லபுரம் சாலை, காரப்பாக்கம், தென்சென்னை, வடசென்னை ஆகிய 4 இடங்களில் கல்லறைத் தோட்டங்கள் அமைப்பதற்கு நிலம் ஒதுக்கித் தந்தமைக்காகவும் தங்களது நன்றியைத் தெரிவித்ததுடன், சிறுபான்மை மக்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்டு, அவர்களின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் தாங்கள் தொடர்ந்து ஆதரவு நல்குவதாகவும் தெரிவித்தனர்.

வெளியீடு: –
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.